# பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் இன்று ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாடு தொடக்கம்: சீன அதிபர் ஜி ஜின்பிங், ரஷ்ய அதிபர் புதின் பங்கேற்பு



**புதுடெல்லி:** ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாடு பிரதமர் நரேந்தி மோடி தலைமையில் காணொலி வாயிலாக நடைபெறுகிறது. இதில் சீன அதிபர் ஜி ஜின்பிங், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் மற்றும் அமைப்பின் தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

ரஷ்யா, சீனா, கிர்கிஸ்தான், கஜகஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகள் இணைந்து கடந்த 2001-ம் ஆண்டு ஜூன் மாதம் 'ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பை' (எஸ்சிஓ) உருவாக்கின. அதன்பின் கடந்த 2005-ம் ஆண்டு முதல் இந்த அமைப்பில் இந்தியா பார்வையாளராக பங்கேற்றது. கடந்த 2017-ம் ஆண்டு இந்தியாவும் பாகிஸ்தானும் எஸ்சிஓ அமைப்பின் நிரந்தர உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டன. இந்த அமைப்பில் உள்ள நாடுகள் சுழற்சி முறையில் தலைமையேற்று வருகின்றன. அந்த வகையில் கடந்தாண்டு செப்.16-ம் தேதி சாமர்கண்ட் பகுதியில் நடைபெற்ற மாநாட்டில், எஸ்சிஓ அமைப்பின் தலைமை பொறுப்பை இந்தியா ஏற்றது.

இந்நிலையில், எஸ்சிஓ அமைப்பின் மாநாடு இன்று பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் காணொலி வாயிலாக நடைபெறுகிறது. இதில் சீன அதிபர் ஜி

ஜின்பிங், ரஷ்ய அதிபர் புதின், பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் மற்றும் எஸ்சிஓ அமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கின்றனர். ரஷ்யாவில் ‘வாக்னர்’ கிளர்ச்சிக் குழுவினர் உள்நாட்டில் மோதலில் ஈடுபட்டது முடிவுக்கு வந்த நிலையில், எஸ்சிஓ மாநாட்டில் புதின் பங்கேற்பது முக்கியத்துவம் பெற்றுள்ளது. அத்துடன், இந்தியாவின் லடாக் பகுதியில் இந்திய - சீன வீரர்களுக்கு இடையில் தொடர்ந்து நீடிக்கும் பதற்றம் மற்றும் பிரதமர் மோடி சமீபத்தில் அமெரிக்க பயணம் மேற்கொண்டு பாதுகாப்புத் துறையில் சில ஒப்பந்தங்கள் மேற்கொண்டது போன்ற சூழ்நிலையில் இந்த மாநாட்டில் சீன அதிபர் ஜின்பிங் பங்கேற்பதும் முக்கியமானதாக கருதப்படுகிறது. மேலும், இந்த அமைப்பில் நிரந்தர உறுப்பினராக சேருவதற்கு ஈரான் நாட்டுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தவிர ஐ.நா. உட்பட உலகில் முக்கிய தனி அமைப்புகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாடு, ‘செக்யூர்’ (பாதுகாப்பு) என்ற கருப்பொருளில் நடைபெற உள்ளது. பாதுகாப்பு, பொருளாதாரம், வர்த்தகம், இணைப்பு,ஒற்றுமை, நாட்டின் இறையாண்மை, பிராந்திய ஒருமைப்பாட்டுக்கான பரஸ்பரம் மரியாதைமற்றும் சுற்றுச்சூழல் போன்றவற்றை உள்ளடக்கிய பாதுகாப்பு என்ற பொருளில் மாநாட்டில் தலைவர்கள் ஆலோசனை நடத்த உள்ளனர்.

**சிய பேரிடர் மீட்பு படை நீலகிரிக்கு வருகை**



உதகை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தேசிய பேரிடர் மீட்பு படையினருடன் ஆட்சியர் அம்ரித் ஆலோசனை நடத்தினார். படம்: ஆர்.டி.சிவசங்கர்

**உதகை**: நீலகிரி மாவட்டத்தில் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ள நிலையில், தேசிய பேரிடர் மீட்பு படையின் 2 குழுக்கள் வருகை தந்துள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் 6-ம் தேதி வரை கன மழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில், கடந்த 2 நாட்களாக அவ்வப்போது சாரல் மழை பெய்து வருகிறது.

இந்நிலையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நீலகிரி மாவட்டத்துக்கு அரக்கோணத்திலிருந்து 40 பேர் கொண்ட தேசிய பேரிடர் மீட்பு படையினர் வருகை தந்துள்ளனர்.

இவர்கள் நேற்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் சா.ப.அம்ரித்தை சந்தித்து, மாவட்ட நிலவரம் குறித்து ஆலோசித்தினர். அப்போது, மாவட்ட வருவாய் அலுவலர் கீர்த்தி பிரியதர்சினி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**நமக்கு நாமே திட்டத்துக்கு தமிழக அரசு ரூ.100 கோடி நிதி விடுவிப்பு**



**சென்னை**: தமிழகத்தில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் நமக்கு நாமே திட்டத்தை இந்தாண்டுக்கு செயல்படுத்த ரூ.100 கோடி நிதி விடுவிக்கப்பட்டு, வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதுகுறித்து ஊரக வளர்ச்சித்துறை செயலர் பா.செந்தில்குமார் வெளியிட்ட அரசாணை: ஊரக வளர்ச்சித்துறை ஆணையர், 2023-24-ம் ஆண்டில் 'நமக்குநாமே' திட்டத்தை செயல்படுத்தரூ.100 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், இந்த ரூ.100 கோடி நிதி மற்றும்இதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை அனுமதிக்கும்படியும் அரசுக்கு கடிதம் எழுதினார்.

இதை பரிசீலித்த தமிழக அரசு, 2023-24-ம் ஆண்டுக்கு 'நமக்குநாமே' திட்டத்துக்காக ரூ.100 கோடிக்கு மட்டும் நிர்வாக ஒப்புதல் அளித்து, நிதி விடுவிக்கப்படுகிறது. இந்தநிதியை சென்னை நீங்கலான மாவட்டங்களுக்கு பெற்று விடுவிக்க ஊரக வளர்ச்சி ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

**வழிகாட்டுதல்கள் வெளியீடு:** இத்திட்டப்படி, அரசு சார்ந்த அனைத்து வகை பள்ளிகள், கல்லூரிகள், விடுதிகளுக்கு கட்டிடங்கள், ஸ்மார்ட் வகுப்பறைகள், சோதனைக்கூடங்கள், கழிப்பறைகள்,சைக்கிள் நிறுத்துமிடங்கள் கட்டுதல், பள்ளிகளில் உள்ள கட்டிடங்களை பழுதுபார்த்தல், புனரமைத் தல் பணி எடுக்கப்பட வேண்டும்.

சமூக நலக்கூடங்கள், சமையலறைகள், உணவறைகள் கட்டுதல், பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகள் கட்டுதல், பொது இடங்கள், சாலை சந்திப்புகளில் விளக்குகள் அமைத்தல் போன்ற பணிகள்எடுக்கப்பட வேண்டும், மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளிட்ட கட்டமைப்புகள் உருவாக்குதல், ஊரக நூலகங்கள்,சத்துணவு கூடங்கள், நியாயவிலைகடை கட்டிடங்கள் கட்டுதல் உள்ளிட்ட பணிகள் எடுக்கப்படலாம்.

அதேநேரம் சம்பந்தப்பட்ட நிலஉரிமையாளர் அனுமதியின்றி எந்தஒரு நிரந்தர கட்டுமானமும் அமைக்கப்பட கூடாது என்பது உள்ளிட்ட விரிவான வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**குஜராத் மாநிலம் சபர்மதி ஆற்றில் சொகுசு படகு சேவையை தொடங்கினார் அமித் ஷா**



'அக்ஷர் ரிவர் குரூஸ்' படகு

**அகமதாபாத்:** சபர்மதி ஆற்றில் 'அக்ஷர் ரிவர் குரூஸ்' என்ற பெயரில் சொகுசு படகு சேவையை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா நேற்று காணொலி மூலம் தொடங்கி வைத்தார். பின்னர் அமைச்சர் அமித் ஷா பேசியதாவது:

பிரதமர் மோடி, குஜராத் முதல்வராக பொறுப்பேற்றபோது சுற்றுலா துறையை மேம்படுத்த முன்னுரிமை வழங்கினார். குறிப்பாக, அகமதாபாத் வழியாக பாயும் சபர்மதி ஆற்றில் கழிவுநீர் கலக்கப்பட்டு மிகவும் மோசமான நிலையில் இருந்தது.

இந்த நிலையை மாற்ற சபர்மதி ஆற்றை தூய்மைப்படுத்த நரேந்திர மோடி நடவடிக்கை எடுத்தார். ஆற்றங்கரை ஓரம் பூங்காவை உருவாக்கி அழகுபடுத்தினார். இதனால் மாநிலத்துக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்தது.

இப்போது இங்கிருந்து 'அக்ஷர் ரிவர் குரூஸ்' என்ற படகு சேவை தொடங்கப்பட்டுள்ளது. 30 மீட்டர் நீளம் கொண்ட இந்தப் படகு 2 இன்ஜின்களைக் கொண்டிருக்கும். இதில், இசையை கேட்டுக் கொண்டே 2 மணி நேரம் பயணம் செய்யலாம். சைவ உணவுகளும் இதில் பரிமாறப்படும். பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, 180 லைப் ஜாக்கெட்கள், தீ தடுப்பு அமைப்புகள், அவசரகால மீட்புப் படகுகள் உள்ளிட்ட வசதிகள் இந்தப் படகில் உள்ளன. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## பேம் மானியம் குறைப்பு எதிரொலி: மின்சார வாகன விற்பனையில் கடும் வீழ்ச்சி



**புதுடெல்லி:** மின்சார வாகனங்களுக்கு வழங்கப்பட்டு வந்த மானியம் குறைக்கப்பட்டதன் எதிரொலியாக கடந்த ஜூன் மாதத்தில் மின்சார வாகனங்களின் விற்பனை கடும் வீழ்ச்சியைக் கண்டுள்ளது.

நாட்டில் மின்சார வாகன போக்குவரத்தினை ஊக்குவிக்கும் விதமாக "இந்தியாவில் மின்சார வாகன தயாரிப்பு மற்றும் துரிதமாக அவற்றை ஏற்றுக் கொள்ளுதல்-பேம் இந்தியா" திட்டத்தின் கீழ் மானியம் வழங்கப்பட்டு வந்தது.

இந்த மானியத் தொகை கடந்த ஜூன் 1, 2023 அன்று, 40 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக குறைக்கப்பட்டது. ஒரு கேடபிள்யூஹெச் பேட்டரிக்கான அதிகபட்ச மானியம் ரூ.10,000 என நிர்ணயிக்கப்பட்டது. பேம் திட்டத்துக்காக ரூ.10,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் அந்த திட்டத்தால் அதிக எண்ணிக்கையிலான மக்கள் பயனடைவார்கள் என்று மத்திய அரசு தெரிவித்தது. ஆனால், மானியம் குறைக்கப்பட்டதால் ஓலா, டிவிஎஸ், ஏத்தர் போன்ற நிறுவனங்கள் தங்களது மின்சார ஸ்கூட்டர்களின் விலையை உயர்த்த வேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்பட்டன. இது வாகன விற்பனையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.நடப்பாண்டு மே மாதத்துடன் ஒப்பிடும்போது, ஜூன் மாதத்தில் நாட்டில் உள்ள அனைத்து ஐந்து முக்கிய எலக்ட்ரிக் பைக் தயாரிப்பு நிறுவனங்களின் விற்பனை கடும் சரிவைச் சந்தித்துள்ளது வாகன் புள்ளிவிவரங்களின் மூலம் தெரியவந்துள்ளது.ஓலா நிறுவனத்தின் மின் வாகன விற்பனை 38.62%, டிவிஎஸ் மோட்டார் இ-பைக் விற்பனை 61.80 சதவீதம், ஏத்தர் எனர்ஜி இ-பைக் விற்பனை 70.51 சதவீதம் சரிவடைந்து, பஜாஜ் ஆட்டோ இ-பைக் விற்பனை 70.24 சதவீதம் சரிந்துள்ளது.

EVA STALIN IAS ACADEMY